பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 1 (16—12—67) சனி ★ வெளியூர்: மார்கழி 2 (17—12—67) ஞாயிறு [இதழ்: 154

# பரம்பரை 'ஆண்டி'யின் 'பாதுஷா' நடிப்பு!

**வெளிநாட்டின் உணவுத் தானிய உதவியின் பெரும் பகுதியை எடுத்து விழுங்கி ஏப்பம் விட்டுக்கொண்டிருப்பது பீகார் மாநிலம்!**

**அமெரிக்கக் கோதுமையையும், அது கொடுக்கும் பால் பவுடரையும் தின்றே வயிறு வளர்ப்பது பீகார் மாநிலம்!**

**'பஞ்ச நிதி' எனும் பெயராலேயே பிச்சை எடுத்து வாழ்க்கை நடத்தும் பரிதாபத்துக்குப் போய்விட்டிருப்பது பீகார் மாநிலம்!**

**ஒட்டிய வயிறு—உலர்ந்த கன்னம்—அழுக்குப் படிந்த மேனி—பரட்டைத் தலை—அரைகுறை ஆடை—ஆகியவைகளோடு வெளிநாட்டார் விஷமத்தனமாகப் படமெடுத்து இந்தியா பற்றிப் பொய்ப் பிரச்சாரம் செய்வதற்கு எப்போதும் அவர்களால் விருப்பமாகத் தேர்ந்தெடுக்கப்படுவது பீகார் மாநிலம்!**

**'ஐரோப்பாவின் நோயாளி' என்று துருக்கியை ஒரு காலத்தில் கேலி செய்ததைப்போல், இந்தியாவின் நோயாளியாக எல்லோருடைய பரிதாபத்திற்கும் அன்றும்—இன்றும்—என்றும் விளங்குவது பீகார் மாநிலம்!**

மனிதனின் கருணை உணர்ச்சி நிழலிலேயே இளைப்பாறிக் கொண்டிருக்கும் பீகார் மாநிலத்து விபூதி மிஸ்ரா என்பவர் தான், தென்னகத்தாரை, 'இருபத்தைந்து ரூபாய்க் கூலிக்கு இந்தியைக் கற்க ஒப்புக்கொள்வர்' என்று திமிர்வாதம் பேசியிருக்கிறார்!

குரல் கொடுத்துவந்த கொள்ளைக்காரனுக்கெல்லாம் 'நடை பாவாடை' விரித்த கோழைகள், தென்னகத்தாரைக் கூலிக்கு மாரடிப்பவர்களாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்!

பிச்சை எடுத்துப் பசியாற்றிக்கொள்வதையே பெருவாழ்வாகப் பழக்கிக்கொண்டிருக்கும் பீகார் உறுப்பினர், தென்னகத்தவரைக் 'கூலிகள்' எனக் கருதிக்கொள்ளும் அளவுக்கு இங்குள்ள 'மீர்ஜாபர்கள்' சிலர் துணிச்சலூட்டியிருக்கின்றனர்!

விபூதி மிஸ்ராக்களின் பாட்டன் - பூட்டன்கள், டெல்லி சுல்தான்களின் ஜனனவை நிரப்பிச் சம்பாதித்துச் சேமித்துவைத்ததை எடுத்துத் தென்னகத்தாருக்குக் கொடுக்கப்போவதில்லை!

"இங்கிருந்து போகும் வரிப்பணத்திற்கேற்ற, வசதிகள் அங்கிருந்து கிடைத்தால் போதும்" என்பதே தென்னகம் எதிர்பார்ப்பதாகும்!

"பீகார் மாநிலததுக்கு இன்னும் சற்றுக் கூடுதலாக நிவாரண நிதி அனுப்பலாமா?" என்று ஆலோசனை செய்துகொண்டிருக்கும் தமிழர்களிடையில், விபூதி மிஸ்ராவின் திமிர்ப் பேச்சு எதிரிடையான பலனையே கொடுக்கும்!

"25 ரூபாய்க்குத் தென்னக மக்களின் மொழி உணர்ச்சியை விலைக்கு வாங்க முடியும்" என்று ஆணவமாகக் கருதிக் கொண்டிருக்கும் விபூதி மிஸ்ராக்கள், 'இந்திய ஒற்றுமை—ஒருமைப்பாடு உணர்வுகளை 25 காசுக்கும் விலை கூறி விற்கத் தயாராகிவிட்டவர்கள்' என்பது, நமக்குப் புரிந்துவிட்டது!

# தலைநகரில் வெட்கக்கேடான நிர்வாகம்!

## மக்களவையில் எஸ். கே. சம்பந்தம் இடித்துரை

★

புதுடில்லி, டிச. 15—

"டில்லியில் நடக்கும் ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சியின் விளைவாக எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்க வேண்டும்" என்று மக்கள் சபையில், ஜனசங்க உறுப்பினர் ஒருவர் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் கழக உறுப்பினர் எஸ். கே. சம்பந்தம் கலந்துகொண்டு பேசுகையில்,

**"மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் தலைநகரில் சட்டமும் ஒழுங்கும் மோசமாகி வருவது வெட்கித் தலைகுனியக் கூடியதாகும்"**

என்றார்.

"இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தவர், போலீசார் அத்துமீறி நடந்துகொண்டதாகக் கூறினார்; அதேநேரத்தில், இந்தி பேசாத மக்கள் இங்கே தாக்கப்பட்டபோது போலீசார், வேடிக்கை பார்த்துக்கொண்டு வாளாவிருந்திருக்கின்றனர். போலீசாரின் இந்தச் செயலைக் குறித்து ஒரு நீதி விசாரணை நடத்தவேண்டும்"

என்றும் அவர் கோரினார்.

# இந்தி வெறியரின் நாத் துடுக்கு!

## மக்களவையில் தென்னக உறுப்பினர்கள் சூடு

புதுடில்லி, டிச. 15—

இன்று மக்களவையில் இந்தி வெறியர் ஒருவர், தென்னாட்டவரை இழிவாகக் குறிப்பிட்டுப் பேசியதையடுத்து தென்னாட்டு உறுப்பினர்கள்—குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்; கழக உறுப்பினர் திரு. க. இராசாராம் சுடச்சுடப் பதிலளித்தார். இதையடுத்து சூடான வாதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

பீகாரைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினரான விபூதி மிஸ்ரா என்பவர், 'தென்னிந்தியர்கள் இந்தியை எதிர்க்கவில்லை; அரசு ஊழியத்தில் இருக்கும் தென்னிந்தியர்களுக்கு ஒரு இருபத்தைந்து ரூபாயைக் கூடுதலாகக் கொடுத்தால் இந்தியைக் கற்றுக்கொள்வார்கள் என்றும் கூறியதையடுத்து அவையில் பரபரப்பு ஏற்பட்டது.

தென்னிந்தியரை அவமதிக்கக்கூடியவகையில் காங்கிரசு உறுப்பினர் கூறியதற்கு தி. மு. க. உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். கேரளத்தைச் சேர்ந்த புரட்சி சோஷலிஸ்டு உறுப்பினர் சீகண்டன் நாயரும், இடதுசாரிக் கம்யூனிஸ்டு உறுப்பினரான விசுவநாத மேனனும் ஆத்திரமடைந்து, 'எங்களுக்கு இருபத்தைந்து ரூபாய் இலஞ்சம் கொடுக்கப் பார்க்கிறீர்களா? நீங்கள் வெளிப்படையாக எங்களை அவமதிக்கிறீர்கள்' என்று உரத்தக் குரலில் கூறினர்.

இரு சாராரும் சூடான வாதங்களைப் பரிமாறிக்கொண்டதையடுத்து காங்கிரசுக் கட்சித் துணைத் தலைவரான திரு. அனுமந்தையா—அமைதி ஏற்படுத்தும் நோக்குடன்—" திரு. இராசாராம் சார்ந்துள்ள கட்சி, தமிழ்நாட்டில் நல்ல முறையில் ஆட்சி நடத்தி வருகிறது; அவரைப்போன்ற கண்ணியமிக்க உறுப்பினர்கள், ஓர் உறுப்பினர் உண்மையில் எந்தக் கருத்துடன் இதனைக் கூறினார் என்பதை எண்ணிப் பார்க்காமல் இப்படி எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடாது" என்று கூறினார்.

இந்த நேரத்தில், தென்னாட்டைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர் ஒருவர் எழுந்து—கம்யூனிஸ்டுக் கட்சியினரைப் பார்த்து, 'இதில், உணர்ச்சிவயப்பட ஒன்றுமில்லை' என்று கூறியபோது, விசுவநாத மேனன் கொதிப்படைந்து, 'அவர் சொன்னபடி உம்மை ரூ. 25-க்கு விற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறீரா?' என்று கேட்டார்.

இந்த நேரத்தில் இன்னொரு பிரச்சினையை எழுப்பினர்—காங்கிரசு உறுப்பினரான திருமதி சுசேதா கிருபளானி;—கருப்புக் கண்ணாடி பணிந்துள்ள உறுப்பினர் ஒருவா (அவர் பெயர் தெரியவில்லையாம்), 'அனுமந்தையாவை ரூ. 25-க்கு விலை கொடுத்து வாங்கிக்கொள்ள முடியும்; எங்களை அப்படி வாங்க முடியாது' என்று கூறியதாகவும், இப்படிச் சொன்னது தங்களை அவமதிப்பதாக உள்ளது என்றும், இந்தக கூற்றை அவையின் நிகழ்ச்சிக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்றும் கூறினர்.

அவைக்குத் தலைமை வகித்திருந்த துணை அவைத் தலைவா திரு. ஆர். கே. கடில்கார், 'அவை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்றால் அதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன' என்று கூறினர்.

இதைக் கேட்டதும், பல காங்கிரசு உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்து, சில நிமிடங்களுக்கெல்லாம் திரும்பி வந்து அமர்ந்து கொண்டனர்.

**"விபூதி மிஸ்ரா இப்படிக் கூறியது—சீகண்டன் நாயர் குறிப்பிட்டதைப் போல் இந்தி ஏகாதிபத்தியம் அல்லவா?"**

என்று திரு. இராசாராம் வினவிய போது, இந்தி வெறியர்கள் ஆத்திரப்பட்டனர்!

**"உங்களிடம் உதவிக்காகவும் வேலைக்காகவும் நாங்கள் பிச்சை கேட்கத்தான் இங்கே வந்திருக்கிறோம் என்பது உங்கள் நினைப்பா?"**

என்று திரு. இராசாராம் கேட்டார். அவர் மேலும் சுட்டிக்காட்டியதாவது:—

**"டில்லியில் பங்கீட்டு அட்டை பெறுவதற்கான படிவம் ஒன்று என்னிடம் அளிக்கப்பட்டது; அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை என்னால் தெரிந்துகொள்ளவே இயலவில்லை; அப்படிவம் முழுவதும் இந்தியிலேயே அச்சிடப்பட்டிருக்கிறது; ஆக, என் சொந்த நாட்டிலேயே நான் அந்நியனாக ஆக்கப்பட்டிருக்கிறேன்."**

"தென்னாட்டில், தொழிலதிபர்களாகவும், பெரு வணிகர்களாகவும், பாங்கி வைத்து நடத்துபவர்களாகவும் உள்ள வடநாட்டுக்காரர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

# சங்கரி இடைத் தேர்தல்

## வாக்குப் பதிவு நேரம்

தமிழ்நாடு சட்டப் பேரவைக்காக சங்கரி தொகுதியில் நடைபெறும் இடைத் தேர்தலில் வாக்குப் பதிவு டிசம்பர் 20-ம் நாள் புதன்கிழமை காலை 8-மணியிலிருந்து மாலை 5-மணி வரையில் நடைபெறும்.

# வாழ்க்கைச் செலவுப் புள்ளி

சென்னை, டிச. 16—

சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி டிசம்பர் 2-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் ஒரு புள்ளி குறைந்து 711-ல் நின்றது.

காய்கறிகள், மிளகாய், கரும்பு, வெல்லம் ஆகியவற்றின் விலை குறைந்ததே இதற்குக் காரணம்.

# இணைப்பு மொழி இயற்கையாகவே உருவாகட்டும்

சென்னை, டிச. 16—

"இரு மொழிகளே இருக்கும் கனடாவில் மொழி ஆதிக்கப் பிரச்சினையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டு—இராயல் கமிஷன் நியமனம் செய்யப்பட்டு—அதன் அறிக்கையின் அடிப்படையில் இரு ஆட்சிமொழிக் கொள்கை அங்கு அமுலாகிறது.

"'தமிழும் ஆங்கிலமும்' என்ற தமிழகத்தின் கொள்கை, இணைப்பு மொழி இயற்கையாக வளரச் செய்வதற்கான முயற்சியில் முதற் படியாகும்.

"எல்லா மொழிகளுமே ஆட்சிமொழிகளாக வளர்ச்சியடையட்டும்; அரசின் பின் பலமில்லாமல் இயற்கையாக இணைப்பு மொழி உருவாகி வளர்ச்சியடையட்டும்! அதற்குக் காலம் தேவை!

"மொழிப் பிரச்சினையில் ஒரு திடீர்த் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது! ஒவ்வோர் இந்திய மொழிக்கும் நீண்டதோர் மரபும், மிகப் பெரும் வரலாறும் உண்டு!

"ஒரு மொழி, மற்ற மொழிகளின்மீது ஆதிக்கம் செலுத்த முற்படக்கூடாது! இந்தியை இணைப்பு மொழியாக மட்டுமன்றி ஆட்சிமொழியாகவும் ஆக்க இப்போது முற்பட்டிருக்கிறார்கள்!

"இந்தியாவைப் போன்ற பரந்த நாட்டில் இணைப்பு மொழியானது, அவசியத்தின் காரணமாகத்தான் தோன்ற முடியும்!

"எந்த இரண்டு மாநிலங்களை எடுத்துக்கொண்டாலும், எல்லைப் பகுதிகளில் இரு மொழிகளும் இணைப்பு மொழிகளாகவே இருக்கும்!

"தமிழகத்தின் வட எல்லையில் தெலுங்கும், மேற்கே கன்னடமும், மலையாளமும் இணைப்பு மொழிகளாக இருக்கும்!"

**—முதலமைச்சர் அண்ணா**

(செய்தியாளர்களிடம்)

# நம் நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 1 (16—12—67) சனி


## தூத்துக்குடித் திட்டம்--தமிழக அரசின் சாதனை

தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக அமைத்திடும் திட்டத்தை, இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விட்டது. இந்திய அரசாங்கத்தின் இவ்வொப்புதலை, இத்துணைக் கண்டத்தின் தொழில் வளர்ச்சியிலும், கடல் வாணிபத்திலும் கருத்துடைய அனைவரும் வரவேற்பார்கள். இவ்வொப்புதலை, குறிப்பாகத் தமிழக மக்கள் மிகுதியான மகிழ்ச்சியுடன் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தை இந்திய அரசாங்கம் இப்பொழுது ஏற்றுக்கொண்டிருப்பதில், தமிழக மக்கள் இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்ளுவர். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்கனவே சேர்க்கப்பட்டிருந்தும்கூட, இத்திட்டத்தை ஒரேயடியாகக் கைவிட்டுவிடலாமா எனச் சிந்தித்து வந்த இந்திய அரசு, இப்பொழுது திட்டத்தை ஒப்புக்கொண்டிருக்கின்றதென்றால், அதைக் கண்டு தமிழக மக்கள் இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்ளத்தானே செய்வர் !

இத்திட்டத்தின் இன்றியமையாமையை, பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக இருந்த நேரத்திலேயே முன்னேற்றக் கழகம் நன்கு உணர்ந்திருந்தது. :இத்திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டி, தீர்மானத்துக்கு மேல் தீர்மானங்களைத் தனது மாநாடுகளில் முன்னேற்றக் கழகம், ஏற்கனவே இந்திய அரசை வற்புறுத்திக் கோரி வந்திருக்கிறது.

அன்று வெறும் எதிர்க் கட்சியாக இருந்து வெறும் தீர்மான வடிவில் இத்திட்டத்தைச் செயல்படுத்துமாறு தொடர்ந்தாற்போல் கோரி வந்திருக்கின்ற முன்னேற்றக் கழகம்—தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும்—'அரசு' என்ற நிலையிலிருந்து இந்திய அரசை நெருக்கிவந்திருக்கிறது. இப்படி, திட்டத்தை நிறைவேற்றிவைக்கும்படி தமிழக அரசு எடுத்த தீவிர முயற்சியை 'இந்திய அரசு அலட்சியப்படுத்திவிடக்கூடும்' என்ற நிலை பிறந்த பொழுது, ஆட்சிப் பொறுப்பில் இருந்துகொண்டே, தூத்துக்குடித் திட்டத்துக்காக 'எழுச்சி நாள்' கொண்டாடும்படி தமிழக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது.

அவ்வேண்டுகோளை, தமிழகச் சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் வெளியிட்ட நேரத்தில், 'எழுச்சி நாளில் காங்கிரசுக் கட்சியினரும் கலந்துகொள்ளவேண்டும்' என்று உருக்கமாகக் கேட்டுக்கொண்டார். காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களோ, அக்கோரிக்கை நாள் கூட்டங்களில் பங்குகொள்ளவில்லை ; ஆனால், கழகத்துடன் மற்ற அரசியல் கட்சிகள் அனைத்தும் எழுச்சி நாள் கூட்டங்களில் கலந்துகொண்டு, தூத்துக்குடித் திட்டத்தைச் செயல்படுத்தும்படி இந்திய அரசைக் கோரின.

காங்கிரசுக் கட்சி நீங்கலாக, மற்ற அரசியல் கட்சிகளுடன் கூட்டாகக் கழகம் கொடுத்த குரல் வீண்போகவில்லை. தமிழக அரசின் முயற்சிக்கு முழு வெற்றி இப்பொழுது கிடைத்திருக்கிறது. எனவே இவ்வெற்றியை, தனது அரிய சாதனையாகக் கழக ஆட்சி கொள்ளும்பட்சத்தில், அதில் பொருந்தாமை எதுவுமில்லை.

தூத்துக்குடித் திட்டத்தைக் குறித்து கழக ஆட்சி வலியுறுத்திய நேரத்தில், துணைத் தலைமை அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும் இருக்கின்ற மொரார்ஜி தேசாய், 'திட்டத்துக்கு இந்திய அரசு ஒப்புதல் தரவில்லை' என்றுகூடச் சாதித்தார். ஆனால், தேசாய் இவ்விளக்கத்தைக் கூறிய நேரத்தில், திட்டப் பணி துவங்கப்பட்டு, ஆமை வேகத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது சிந்திக்கத்தக்கது.

தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக அமைத்திடவேண்டும் என்ற ஆரம்ப ஏற்பாட்டை, 'இத்துறைமுகத்தின் மூலம் கடல் வாணிபம் பெருகிவருவதற்கு வாய்ப்பு இருக்காது' என்ற காரணத்தைக் காட்டி, கைவிட்டுவிட இந்திய அரசு முனைந்தது. இத்துடன், 'வெறும் மீன்பிடித் துறைமுகமாக அமைத்துவிட்டால் போதும்' என்ற கருத்தையும் இந்திய அரசு வெளியிடத் துணிந்தது. ஆனால் தமிழக அரசு, காலத்தில் மேற்கொண்ட தீவிர முயற்சி, தடுமாற்றத்தை அகற்றித் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி இந்திய அரசைக் கட்டாயப்படுத்தியிருக்கிறது.

இந்திய அரசின் அதிகாரிகளும், தமிழக அரசின் அதிகாரிகளும், தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக மாற்றி அமைப்பதன் வாயிலாக எதிர்காலத்தில் அத்துறைமுகத்தில் நடைபெறக்கூடிய ஏற்றுமதி–இறக்குமதி அளவை, கூட்டாக நுணுகி ஆராய்ந்தனர். ஆண்டுக்கு ஆண்டு அத்துறைமுகத்தின் ஏற்றுமதி–இறக்குமதியின் அளவு கணிசமாகப் பெருகக்கூடும் என்பதும், அத்துறைமுகத்தை விரிவாக்குவதற்கு இடப்படக்கூடிய மூலதனச் செலவுக்கேற்பப் பலன் கிடைத்திடும் என்பதும் அவ்வாராய்ச்சிகள் மூலமாகக் கிடைத்த முடிவாகும்,

தூத்துக்குடியை ஆழ்கடல் துறைமுகமாக அமைக்கப்படக்கூடிய திட்டத்துக்காகும் செலவு ரூ. 24.40 கோடியாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இம்மதிப்பீட்டில் கடந்த நிதி ஆண்டுவரையில் செலவழிக்கப்பட்டிருக்கின்ற ரூ. 4-கோடியும் சேர்ந்திருக்கிறது.

தூத்துக்குடித் துறைமுகத்தில், ஆண்டு செல்லச் செல்ல கடல் வாணிபம் கணிசமாகப் பெருகக்கூடும் எனச் செய்யப்பட்டிருக்கின்ற முடிவு, இங்கு இப்பொழுது நடைபெறக்கூடிய நிலக்கரி இறக்குமதியையும், உப்பு ஏற்றுமதியையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதாகும்.

தூத்துக்குடி உப்புக்குள்ள தனிச் சிறப்பைக் கருதி, அந்த உப்பை மேலும் கூடுதலாக இறக்குமதி செய்வதிலும், அதே உப்பை மூலப் பொருளாகக் கொண்ட பல தொழில்களைக் கூட்டாக அப்பகுதியிலேயே துவங்கவும் ஜப்பான் விரும்புகிறது. இதன் காரணமாக, தூத்துக்குடி உப்புக்கு எதிர்காலத்தில் நல்ல கிராக்கி ஏற்படும் என்பதுடன், அப்பண்டத்தின் ஏற்றுமதியும் கூடுதலாவதற்கு வாய்ப்பிருக்கிறது.

அப்பகுதியில் மேலும் பல தொழில்கள் துவங்கப்பட வேண்டும். அதற்கான வாய்ப்பும் அங்கு இருக்கத்தான் இருக்கிறது.

அப்பகுதி மின்சாரத் தேவையை நிறைவு செய்வதற்காக, எரி மின்சார உற்பத்தி நிலையம் ஒன்று இன்றியமையாததாகும் ; இத்துறையில், ஏற்கனவே முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இம்முயற்சி, இந்திய அரசின் ஒப்புதல் பெற முடியாததால் கருவிலேயே சிதைக்கப்பட்டுவிட்டது. அம்மின்சார உற்பத்தி நிலையத்தை நிறுவ, இந்திய அரசு ஒப்புதல் தர முன்வர வேண்டும்.

தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத்தின் மூலம் எதிர்பார்க்கின்ற பலனைவிடக் கணிசமான பலன் கிடைக்க வேண்டுமானால், சேது சமுத்திரத் திட்டத்தையும், மேலும் காலந்தாழ்த்தாமல் மேற்கொள்ளுதல் வேண்டும். சேது சமுததிரத்தை ஆழப்படுத்துவது, அப்பணிக்காகும் செலவு—அதனால் ஏற்படக்கூடிய பலாபலன் ஆகிய அனைத்தும் பற்றிய உண்மை, ஏற்கனவே விரிவாக ஆராய்ந்து 'அறியப்பட்டிருக்கிறது ; அத்திட்டம் பற்றி இனி ஆராய்ந்தறிவதற்கு எதுவுமில்லை.

தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற இதே நேரத்தில், சேது சமுத்திரத்தை ஆழப்படுத்தும் ஏற்பாட்டையும் மேற்கொள்ள முன்வர வேண்டும். 'இரண்டு திட்டத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு' என்ற உண்மை, இந்திய அரசுக்குத் தெரியாதென்பதில்லை.

மிதமிஞ்சிய தயக்கத்துக்கும் காலந்தாழ்த்தலுக்கும் தடுமாற்றத்துக்கும் பின்னர், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்துக்கு இந்திய அரசு தந்திருக்கின்ற ஒப்புதல் பாராட்டுதற்குரியதாகும். இத்திட்டத்துக்கு இந்திய அரசின் ஒப்புதலைப் பெற இன்றையத் தமிழக அரசு மிகுதியான முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறது. இதன் காரணமாக, இத்திட்டத்துக்குக் கிடைத்திருக்கின்ற வெற்றி, கழக ஆட்சியின் அரிய சாதனையேயாகும்.

—கா. க.

## பக்தவத்சலத்தை கேட்க வேண்டிய கேள்வி!

### காங்கிரசாருக்கு அமைச்சர் கருணாநிதி தரும் விளக்கம்

"உலகத் தமிழ் மாநாடு நடத்துவதைக் காங்கிரசுக்காரர்கள் கேலி செய்திருக்கிறார்கள் ; 'பட்டணத்திலே பணத்தைக் கரியாக்கிட—வாண வேடிக்கை விட—பஞ்சத்தில் அடிபட்டுள்ள கிராமங்களில் பண வசூலா ?' என்று துண்டு அறிக்கை போட்டிருக்கிறார்கள் !

"இதில் வேடிக்கை என்னவென்றால், இங்கே உலகத் தமிழ் மாநாடு நடத்துவதாக ஒப்புக்கொண்டு வந்தவரே அன்றைய முதலமைச்சர் பக்தவத்சலம்தான் ! அதை ஒழுங்காக நடத்துவது தி. மு. கழக அரசு ! இதிலென்ன வாண வேடிக்கை இருக்கிறது ? இருப்பினும், கேட்கிறார்கள்—கேட்பவர்கள் இங்கு வரத்தான் போகிறார்கள் !

" 'பல இலட்ச ரூபாய்ச் செலவில் சிலைகளா ?' என்று கேட்கிறார்கள் ; இப்படிக் கேட்கும் இவர்கள்தான், கம்பனுக்குச் சிலை வைக்கும்படியும் சொல்கிறார்கள் !

"இப்படி இரட்டை நாக்குடன் பேசும் இவர்களை—பொய்யை மூலதனமாகக்கொண்டு அரசியல் நடத்திட எண்ணும் இவர்களது திசை திருப்பும் முயற்சிகளை அமைதிவழி நின்று மக்கள் முறியடித்திட வேண்டும் !"

—சென்னை 79-வது வட்டத்தில் நடைபெற்ற இராஜாஜி பிறந்த நாள் விழாக் கூட்டத்தில்

## இந்தி வெறியர்களுக்கு அஞ்சிய தொல்பொருள் துறையினர் !

ஆக்ரா, டிச. 16—

உலகப் புகழ்பெற்ற தாஜ்மகால், பதேபூர் சிக்ரி, மற்றும் வரலாற்று முக்கியத்துவம்கொண்ட சின்னங்களில், வெளிநாட்டவர் உட்படப் பலரும் அச்சின்னங்களைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக ஆங்கிலத்தில் வைக்கப்பட்டிருந்த தகவல் பலகைகள் அகற்றப்பட்டுவிட்டன.

ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சிக்காரர்களின் கோரிக்கையை ஏற்று, தொல்பொருள் துறையினரே அவற்றை அகற்றிவிட்டனராம் !

தாஜ்மகாலில் இன்னமும் ஒரு சில ஆங்கிலப் பலகைகள் இருந்தபோதிலும், அவற்றில் மிக முக்கியமான தகவல் பலகை அகற்றப்பட்டு விட்டது.

சலவைக் கல்லினால் ஆன அத்தகவல் பலகையில் ஷாஜகான்–மும்தாஜ் மகலின் காதல் கதை ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டிருந்தது ; அப்பலகை, இதுவரை பயணிகளைப் பெரிதும் கவர்ந்து வந்ததாகும்.

## சேலம் உருக்காலைத் திட்டம்

### தமிழக அரசின் முயற்சி வெற்றி பெறும்

புதுடில்லி, டிச. 13—

ரூ. 24 கோடி செலவில் தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தைச் செயலாக்க மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சேலம் எஃகு ஆலைத் திட்டமும் விரைவில் அங்கீகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"ஜப்பான் எஃகு நிபுணர்கள், 'சேலம் ஆலைத் திட்டம் இயலக்கூடியதே' என்று அறிவித்திருக்கிறார்கள்" என்று விருதுநகரில் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்திருந்தார்கள் ; எனவே, சேலம் எஃகு ஆலைத் திட்டத்தை செயலாக்குவது குறித்துத் தமிழக அரசு தீவிரமாக மத்திய அரசை வலியுறுத்தும் எனத் தெரிகிறது.

## 'இன்று அல்ல--இனி என்றும் இந்தியை ஏற்கமாட்டோம்'

### 'தென்னக மக்கள் கிளர்ந்தெழாததற்கு காரணம் தி.மு.க. மீது கொண்டுள்ள நம்பிக்கையே'

### நாடாளுமன்றத்தில் டாக்டர் சந்தோஷம் முழக்கம்

புதுடில்லி, டிச. 13—

ஆட்சிமொழித் திருத்த மசோதாமீது மக்களவையில் நடந்த விவாதத்தில், தமிழகச் சுதந்தராக் கட்சி உறுப்பினர் டாக்டர் சந்தோஷம் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"எல்லோரையும் திருப்திப்படுத்த அரசு நினைக்கிறது — ஆனால் ஒருவரைக்கூடத் திருப்திப்படுத்தப் போவதில்லை !

இந்த மசோதாவில் அரசு தோற்றுவிட்டால் அதற்காக வருத்தப்பட எதுவுமில்லை ; ஆனால், தேசிய ஒருமைப்பாடு பாதிக்கப்படுமானால் அது, அனை வருக்கும் துயரந்தரும் நிகழ்ச்சியாகும் !

மொழிப் பிரச்சினையில் மிகவும் சூடான வாதங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன ! அந்த அளவுக்கு வன்செயல்களும் தலைகாட்டியிருக்கின்றன !

இந்தி பேசாத மக்கள் இந்த அளவுக்குத் தங்கள் உணர்ச்சியை ஆர்ப்பாட்டங்கள் மூலம் எடுத்துக்காட்ட விரும்பாததற்குக் காரணம், அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் தங்களின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் என்ற நம்பிக்கை கொண்டிருப்பதுதான் !

கடந்த பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் நிறுத்திய 25 வேட்பாளர்களும் வெற்றி பெற்றதே இதற்குச் சான்றாகும் !

நெடுங்காலத்துக்குப் பின்னர் கூடத் தென்னாட்டு மக்கள் இந்தியை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் ; ஏனெனில், இந்தியை ஏற்றுக்கொண்டால், எல்லா இந்திய மொழிகளுக்கும் சம தகுதி பெற முடியாது என்பதை உணருகிறார்கள். சம உரிமை பெற்ற குடிமக்களாக வாழவே அவர்கள் விரும்புகிறார்கள் ! இந்தியை ஏற்றுக்கொள்வதே அவர்கட்கு இழிவு தருவதாகும் !

இந்திய ஒற்றுமையைத் தென்னாட்டு மக்கள் விரும்புகிறார்கள் ; ஆனால் இந்த ஒற்றுமை, உண்மையான ஒற்றுமையை உருவாக்காது ; அது, 'இந்திய மக்கள் அனைவரும் சமம்' என்ற ஒரே அடிப்படை மீது உருவாக்கப்பட வேண்டும்."

## சலவைத் தொழிலாளர் கூலி நிர்ணயக் குழு

### அரசிடம் அறிக்கை அளித்தது

கிராமங்களிலும், வீடுகளிலும், லாண்டரி கடைகளிலும் இஸ்திரி வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும், துணி வெளுக்கும் தொழிலாளர்களுக்கும் அடிப்படை கூலி நிர்ணயிக்கக் குழு ஒன்று வேண்டுமென மதுரை—திருப்பரங்குன்றம் தி. மு. க. பொது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது நினைவிருக்கலாம்.

அத்தகைய குழு, தமிழக அரசின் தொழிலாளர் நல உதவிக் கமிஷனர் புருசோத்தமன் தலைமையில் அமைக்கப்பட்டது. இக்குழுவில் தி. மு. க. தொழிற்சங்கமான தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர் சி. ஆர். கோலப்பாவும் இருக்கிறார்; மற்றும் 10-பேர் இதன் உறுப்பினர்களாக இருந்து பல மாவட்டங்களுக்கும் சென்று சலவைத் தொழிலாளர்களின் நிலைமைகளை அறிந்து இப்போழுது அரசுக்கு அதனுடைய அறிக்கை தரப்பட்டிருக்கிறது.

## சவரத் தொழிலாளர்கட்கு நவீன சாதனங்கள்

### கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் வழங்கப்பட்டது

கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம் சித்தலவாய்க் கிராமம் மலையப்பன் காலனியில், அரிசன தினம், கல்வி விரிவு அதிகாரி எஸ். குமாரசாமி தலைமையில் சிறப்புற நடைபெற்றது; எஸ். சி. மாரியப்பா, எஸ். மாரியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கல்வி விரிவு அதிகாரி தமது உரையில், காந்தியின் கொள்கைகள்—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு செய்யும் பல சலுகைகள்... குடும்ப நலத் திட்டம் — சிறு சேமிப்பு மற்றும் திட்டங்கள்பற்றி எடுத்துக் கூறினார்; இந்த ஒன்றியத்தைச் சேர்ந்த ஏழு சவரத் தொழிலாளர்களுக்கு நவீன கருவிகள் அடங்கிய பெட்டிகளை வழங்கினார். மாயன் நன்றி நவின்றார்.

## சென்னை மாநகர சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் சங்கம்

சென்னை மாநகர சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் சங்கத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம், தோழர் கே. எஸ். தங்கவேலு தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : எஸ். துருவன்; துணைத் தலைவர் : இராசகோபால்; பொதுச்செயலாளர் : த. பாபு; துணைப் பொதுச்செயலாளர் : லோகநாதன்; பொருளாளர் : நா. பாண்டுரங்கன்; சட்ட ஆலோசகர் : நடராசன் எம்.ஏ.பி.எல்.; மற்றும் ஏழுபேர் செயற்குழு உறுப்பினர்கள்.

## அந்தநல்லூரில் குடும்ப நலத் திட்டப் பிரசாரம்

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டப் பிரசாரப் பொதுக்கூட்டம், திரு. பெ. இராசு தலைமையில் 28—11—67-ல் நடைபெற்றது. மாவட்டப் பொதுச் சுகாதாரத் துறையைச் சேர்ந்த திட்ட விளம்பர அதிகாரி வி. டி. வீரப்பன் பி.ஏ.பி.எல்., குடும்ப நலத் திட்டத்தைப் பற்றிச் சிறப்புரையாற்றினார்.

குடும்ப நலத் திட்ட நல சம்பந்தமான படக் காட்சியும் காண்பிக்கப்பட்டது. டி. எஸ். ரெங்கநாதன் நன்றி நவின்றார்.

## எருமணந்தாங்கல் ஊராட்சி இடைத் தேர்தல்

30—11—67 அன்று நடைபெற்ற எருமணந்தாங்கள் ஊராட்சிமன்ற இரண்டாவது வார்டு இடைத் தேர்தலில், ஏ. நந்தகோபால் (கழக உறுப்பினர்) போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## உள்துறை அமைச்சரின் பொருந்தா வாதம்?

### ‘ஆங்கிலம் வேண்டும்’ என்போர் விவரம் அறியாதவர்களாம்!

### ‘இந்தி வேண்டும்’ என்று தென்னாடு கோரும் காலம் வருமாம்

புதுடில்லி, டிச. 13—

ஆட்சிமொழித் திருத்த மசோதாமீது நடந்த விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசிய உள்துறை அமைச்சர் சவாண், முன்னுக்குப் பின் முரணை—பொருத்தமில்லாத—அர்த்தமற்ற வாதங்களையெல்லாம் அடுக்கிச் சொல்லியிருக்கிறார்; அவருடைய பேச்சின் சுருக்கம் வருமாறு :—

### இந்தி மட்டுமே ஆட்சிமொழியாகுமாம்

நாளடைவில் இந்தி ஒரே ஆட்சி மொழியாக ஆவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாம் மும்முரமாக எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்று இச் சபைக்கு உறுதி கூற விரும்புகிறேன். அதே சமயத்தில் நயமாக எடுத்துரைத்து இதைச் செய்தாக வேண்டும் என்ற நிலைமையையும் தெளிவுபடுத்தியாக வேண்டும்.

### நூற்றுண்டுகளாக முடியாத காரியம்

கடந்த சில நூற்றுண்டுகளில் எந்த ஒரு இந்திய மொழியாவது ஆட்சிமொழித் தகுதியைப் பெற்றதில்லை என்பதை மறந்துவிடக் கூடாது; பாரசீக மொழியோ அல்லது ஆங்கிலமோ தான் ஆட்சிமொழியாக இருந்து வந்திருக்கிறது; ‘அதிகாரவர்க்கத்தினருக்குத் தெரிந்த மொழியாயிருந்தால் போதும்’ என்று ஆட்சியாளர்கள் கருதினார்கள்.

### இந்தி ஏகாதிபத்தியம் இல்லையாம்

இந்தி ஏகாதிபத்தியம் இருப்பதாகக் கூறப்படுகிறது; இந்தி ஏகாதிபத்தியம் இல்லை. இந்நாட்டில் இந்தி ஏகாதிபத்தியம் இருந்த இடங்களில் எல்லாம் அதை ஒரேயடியாக முறியடித்துவிட்டிருக்கிறோம்.

### ‘நேசம்’ காட்டி ‘மோசம்’ செய்யத் திட்டம்

நமது சகோதரர் ஒருவரின் மனதில் சந்தேகங்கள் ஏதாவது இருக்குமாகில், அவர் மனதை நாம் புரிந்துகொள்ள முயலவேண்டும். அவர் மனதில் சில சந்தேகங்கள் இருக்கின்றன. அவரிடம் ஏன் இம்மாதிரி உணர்ச்சிகள் காணப்படுகின்றன என்பதைக் கண்டறிய நேசபூர்வமாகவும், நாசுக்காகவும் நாம் முயலவேண்டும்.

### ஆங்கிலம் வேண்டும் என்போர் புரியாதவர்களாம்!

‘ஆங்கிலத்தை மட்டும்தான் ஆட்சிமொழியாக ஏற்போம்’ என்று கூறும் சில உறுப்பினர்கள், மக்களைப் புரிந்துகொள்ளவில்லை—இந்தியாவைப் புரிந்துகொள்ளவில்லை!

### ஆங்கிலத்தை விட்டுவிடவும் கூடாதாம்!

அனைத்து நாட்டு விவகாரங்களுக்காகவும், விஞ்ஞானப் படிப்புக்காகவும் நாட்டில் ஆங்கிலத்துக்கு உரிய இடம் உண்டு என்பதை உணரவேண்டும். சரித்திரப் போக்கின் காரணமாக நம் நாட்டில் ஆங்கிலத்தைக் கற்றுள்ளோம்; அதை இழந்துவிடக் கூடாது.

ஆனால், ஆங்கிலம் மட்டும்தான் பொது மொழியாக இருக்க வேண்டுமென்ற நிலையை மேற்கொண்டிருப்பவர்கள் ஏதோ ஒரு தனி உலகில் வசிப்பதாகத்தான் சொல்லவேண்டும்.

‘இரு மொழி ஏற்பாடு’ என்ற பெயரில் ஆங்கிலத்தைத் திணிக்க யாராவது விரும்பினால், அவர்கள் இந்தியாவைப் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில்தான் எல்லா மாநிலங்களும் இணங்கும்வரை ஆங்கிலத்தை கைவிடக்கூடாது என்பதற்கு இம்மசோதாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது!

இந்தியை நிராகரிக்கும் ‘ரத்து’ அதிகாரம் (வீட்டோ) எந்த மாநிலத்துக்கும் கொடுக்கப்படவில்லை; அதற்கு மாறாக, இது பற்றி மறுசிந்தனை செய்து, இந்தியை ஏற்கத் தங்களைத் தயார் செய்துகொள்ள அவற்றுக்கு அவகாசம் அளித்திருக்கிறது இந்த மசோதா! இந்தியை ஒரே ஆட்சிமொழியாக ஆக்க வேண்டும் என்று தாங்கள் விரும்புவதாக சில ஆண்டுகளுக்குப் பிறகு அவை வந்து கேட்க ஒரு வாய்ப்பு அளிக்கிறது!

### சனநாயக விளக்கம்!

தி. மு. கழக உறுப்பினர்களும், சனநாயகவாதிகள்தான்; ஒருவரோடு ஒருவர் பேசி மறுதரப்பு கருத்தைப் புரிந்துகொள்வது தான் சனநாயகம்; நான் சொல்வது சரி; ஒருவேளை நான் சொல்லுவது தவருகவுமிருக்கலாம் என்று கருதினல்தான் கூடிப் பேசமுடியும்!

### ஆர்வத்தை உணருகிருராம்!

தென்னாட்டு மக்கள் நாட்டின் வாழ்வில் பங்குகொள்ள மிக ஆவலுடையவர்களாக இருக்கிறார்கள்; இப்போது மட்டுமின்றி, பல நூற்றுண்டுக்காலமாக இருந்துவரும் நிலைமையாகும் இது!

‘இந்தியா’ என்ற பரந்த உருவம் தனக்கும் சொந்தமானது என்பதில் தென்னிந்தியாவுக்கு இருந்துவரும் ஆர்வத்தை நான் உணர்ந்திருக்கிறேன்.

### ‘இந்தி வேண்டும்’ என்று தென்னாடு கேட்குமாம்!

நாட்டின் பிற பகுதிகளுடன் சேர்ந்து தங்களுக்கும் இந்தி வேண்டும் என்று தென்னிந்தியர்கள் கோரும் காலம் வரத்தான் போகிறது என்பதில் சந்தேகம் இல்லை!”

## தமிழ் மருத்துவத்துக்கு தனி இயக்குநர்

### அமைச்சர் சாதிக் பாட்சா அறிவிப்பு

மதுரை, டிச. 11—

“தமிழ் மருத்துவமான சித்த மருத்துவ முறைக்கு விரைவில் தனி இயக்குநர் ஒருவரைத் தமிழக அரசு நியமிக்க இருக்கிறது”

என சுகாதாரத் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா இங்கு தெரிவித்தார்.

தமுக்கம் கலையரங்கில் நடந்த மதுரை சித்த வைத்திய சங்கத்தின் 40-வது ஆண்டுவிழாவில் அமைச்சர் சாதிக் பாட்சா, சித்த மருத்துவக் கண்காட்சியைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது :—

“சித்த மருத்துவத்தை ஊக்குவிக்க எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டில் சித்த மருத்துவம் பற்றி ஒரு தனிப் பிரிவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

“ஒவ்வொரு தாலுகா அரசினர் மருத்துவமனையிலும் சித்த மருத்துவத்தைப் பரப்ப சித்த மருத்துவப் பிரிவும் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.”

## சென்னை 80-வது வட்ட என். எஸ். கே. மன்றம்

சென்னை 80-வது வட்டம் தி. மு. கழகத் துணையமைப்பான என். எஸ். கே. மன்ற நிர்வாகிகள் தேர்தல் வட்டச் செயலாளர் எஸ். ஆனந்தனை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : மு பாளையம்; செயலாளர் : பாபு; துணைச்செலாளர் : தேவன்; பொருளாளர் : கே. சுப்பிரமணி; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

## சென்னை 95-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றம்

சென்னை 95-வது வட்ட எம். ஜி. ஆர். மன்ற நிர்வாகிகள் தேர்தல் 2—12—67 இரவு 10-மணியளவில் வட்ட அவைத் தலைவர் ஆர். எம். வரதராசன்—பகுதித் துணைச் செயலாளர் கு. சுந்தரம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. பகுதிச் செயலாளர் வை. பாலசுந்தரம் ஆணையராக இருந்து தேர்தலை நடத்தி வைத்தார்; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : கீ. மு. கோவிந்தன்; செயலாளர் : பெ. கோபால்; துணைச்செயலாளர் : இரா. கிருட்டினன்; பொருளாளர் : எம். வரதன்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

## டாக்டர் சிதம்பரநாதனரின் சிறப்பியல்புகள்

### இரங்கல் கூட்டத்தில் புலவர்கள் புகழுரை

டாக்டர் அ. சிதம்பரநாதனர் மறைவு குறித்து 30—11—67-ல் சென்னை மாணவர் மன்றக் கூடத்தில் புலவர் ந. சண்முகம் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. தலைவர், மறைந்த பெரியாரின் மாண்புகளை விளக்கிக் கூறி அவர் பிரிவு தமிழகத்திற்கும் சிறப்பாகத் தமிழாசிரியர்கட்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்று குறிப்பிட்டார்.

வல்லை பாலசுப்பிரமணியம் பி.ஏ., மறைந்த பெரியாரின் பண்பாடுகளை விளக்கிக் கூறினார்.

பேராசிரியர் அன்பு கணபதி, சிதம்பரநாதனர் சினம் கண்டபோது சினந்தும், மற்றபோது குழந்தைபோலவும் பழகுவார் என்று குறிப்பிட்டார்.

புலவர் ஏகாம்பரநாதன் (தஞ்சை) பேசும்போது ‘சிதம்பரநாதனர் சிறந்த நிர்வாகி’ எனக் குறிப்பிட்டார்.

புலவர் மி. ச. நடேசன், சிதம்பரநாதனர், ‘சிறந்த நினைவாற்றல் மிக்கவர்’ என்றார்.

புலவர் தணிகை உலகநாதன், ‘சிதம்பரநாதனர் நன்கு உபசரிக்கும் பண்புடையவர்’ எனக் குறிப்பிட்டார்.

புலவர் சதாசிவம், ‘தமிழாசிரியர் குடும்பம் தம் தலைவரை இழந்து தவிக்கிறது’ என்றார்.

மற்றும் மயிலை சிவ. சண்முகசுந்தரம், தாமரைக்கண்ணி அம்மையார், மாணவர் இரவி ஆகியவர்களும், அவர் மறைவு குறித்து கருத்துரை வழங்கினர்.

இறுதியில் புலவர் கோ. வில்வபதி பேசுகையில், ‘சிதம்பரநாதனர் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ளும் மக்களுக்குக் கருத்துரை கூறுவார் என்று நினைத்துக்கொண்டிருந்த நேரத்தில் மறைந்துவிட்டது நமது உள்ளங்களில் ஆருத வேதனையை உண்டாக்கிவிட்டது’ என்றார்.

இரங்கல் தீர்மானத்தை முன்மொழிய, அனைவரும் எழுந்து நின்று மறைந்த பெரியாருக்குத் தம் இறுதி வணக்கத்தை அறிவித்துக்கொண்டனர்.

## சென்னை—நுங்கம்பாக்கம் சமூக ஊழியர் மன்றம்

சென்னை—நுங்கம்பாக்கம் சமூக ஊழியர் மன்றப் பணிமனைத் திறப்பு விழா 3—12—67-ல், தோழர் க. வெற்றியழகன் தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் மேயர் இரா. சம்பந்தம் கழகக் கொடியை ஏற்றி வைத்துப் பேசினார்; தியாகராய நகர் பகுதி தி. மு. க. அவைத் தலைவர் லோகநாதன் பணிமனையைத் திறந்துவைத்துச் சிறப்புரையாற்றினார்; அவைத் தலைவர் கே. ஏழுமலை அவர்கள், குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார்; மன்றச் செயலாளர் கோ. சீனிவாசன் நன்றி நவின்றார்.

## ஆவடி மக்கள் மன்றம்

ஆவடி காமராச நகர் மக்கள் மன்றத்தின் நிர்வாகிகள் தேர்தலில் ஜே. எஸ். மணியம் தலைவராகவும், அகமத் ஷா துணைத் தலைவராகவும், மா. இலக்குமணன் செயலாளராகவும், சத்யம் துணைச்செயலாளராகவும், பி. இலக்குமிபதி பொருளாளராகவும், டி. எம். இராமதாஸ், நம்பிராசன், திவ்வியநாதன், கந்தசாமி, எஸ். துரை, மாணிக்கம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## பழனி நகர தி.மு.க. பொதுக்கூட்டம்

பழனி நகர தி. மு. க. சார்பில் 2—12—67-ல், தேரடித் திடலில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது; நகரமன்ற உறுப்பினர் திரு. பி. எஸ். சேக் தலைமை வகித்தார்; தோழர்கள் குன்னத்தூர் க. அன்பரசு, நகரச் செயலாளர் ஒ. முத்துசாமி, வெங்கடாசலம் ஆகியோர் கழக அரசின் சாதனை விளக்கி உரையாற்றினர்.

## காமராசரின் ‘வீரப் பிரதாபம்’ என்ன ஆயிற்று?

### புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். கேள்வி

“முரசொலி மாறன் நின்ற தென் சென்னைத் தொகுதியில் காமராசர் சொன்னதென்ன?—‘திங்கான இந்தியைத் திணித்திடுவதைத் தடுக்க இராமசாமி திட்டம் தருவார்; டில்லியில் உள்ளவர்கள் அதை ஏற்க மறுத்தால், இராமசாமி இராஜினமா செய்வார்’ என்றார்; ஆனல் நம் மக்கள், அந்த இராஜினமா பேச்சை நம்பவில்லை—இராமசாமியைத் தேர்ந்தெடுக்கவில்லை!

“இப்போது கொண்டுவரப்பட்டுள்ள மசோதா, ‘எந்தவிதத் திருத்தமும் இல்லாமல் நிறைவேற்றப்பட வேண்டும்’ என்றார்—காமராசர்! இப்போதும் அவர்தான் காங்கிரசுத் தலைவர்! ஆனல், திருத்திவிட்டார்கள்! அதற்கு, இங்கேயிருந்து போன காங்கிரசு எம்.பி.-க்கள் ஆதரித்துச் சாதகமாக ஓட்டளித்திருக்கிறார்கள்; கழக எம்.பி.-க்கள் எதிர்த்திருக்கிறார்கள்!

“காங்கிரசுக்காரர்கள் இந்த வெட்கக்கேடான நிலையில், யாரை இராஜினமா செய்யச் சொல்லப்போகிறார்கள்? காங்கிரசுத் தலைவர் காமராசரது கருத்துக்கு மாறுகத் திருத்தத்தைச் செய்துவிட்டார்களே! இங்கிருந்து போன மூன்று காங்கிரசுக்காரர்களும் இராஜினமா செய்யாவிட்டாலும், அடையாளத்துக்கு ஒருவராவது இராஜினமாச் செய்திருக்கலாமே! இதுதான் காமராசர் நிலை!”

—சென்னை 79-வது வட்டத்தில் நடைபெற்ற இராஜாஜி பிறந்த நாள் விழாக் கூட்டத்தில்

# 'இணைப்பு மொழி'ப் பிரச்சினையை இப்போது தள்ளிப்போடலாம்'

## 'தமிழே இணைப்பு மொழி ஆகவும் வாய்ப்பு உண்டு'

### 'எங்கள் கருத்தை ஏற்காவிடில் மக்கள் கட்டளைப்படி நடப்போம்' --- ஆட்சி மொழி மசோதா பற்றி

## முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, டிச. 15—

" ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதாவில் உள்ள சிறிதளவு நன்மையும் கெடுகின்ற வகையில் கொண்டு வரப்படுகின்ற திருத்தங்கள் அனைத்தையும் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கும்; எங்களது இந்த எதிர்ப்பையும் மீறி இம்மசோதா நிறைவேற்றப்படுமானால், அதை எதிர்த்திட நேரடி நடவடிக்கை எதைப் பற்றியும் நாங்கள் இப்போது சிந்திக்கவில்லை; அந்தச் சட்டத்துக்கு எதிராக மக்களது கருத்தைத் திரட்டி—மக்களது கட்டளையைப் பெறுகின்ற பணியில் ஈடுபடுவோம் "

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், தமிழகத் தலைமைச் செயலகத்தில் தம்மைச் சந்தித்த செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்,

" தி. மு. கழகம் கோரும் திருத்தங்களையும் ஏற்காமல் மொழி மசோதா நிறைவேறுமானால், என்ன செய்யப்போகிறீர்கள் ?" என்று செய்தியாளர் கேட்டபோது, அண்ணா அவர்கள் சொன்னதாவது :—

அண்ணா :—" நேரடியாகச் செயலில் இறங்குவது—கிளர்ச்சி செய்வது போன்ற வகைகளில் நாங்கள் எண்ணமிடவில்லை. பொதுமக்களின் கருத்தைத் திரட்டுவதே எங்கள் எதிர்காலப் பணியாக இருக்கும்."

கேள்வி :—" நேரடி நடவடிக்கை இருக்காது என்பதன் மூலம், நீங்களே உங்கள் நிலைக்குப் பலக் குறைவை ஏற்படுத்திக் கொள்ளுகிறீர்களல்லவா ?"

அண்ணா :—" வடக்கில் ச. சோ. கட்சி அமைச்சர்களைப் பின்பற்றி, நாடாளுமன்றத்தின் முன்பு நாங்கள் மறியல் செய்யப்போவதில்லை.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் மேலும் விளக்கியதாவது :—

" மொழிப் பிரச்சினை, காலக்கெடு வைத்துத் தீர்க்கக்கூடியது அல்ல. இராஜாஜியின் புத்திமதியை ஏற்றுக்கொண்டு பிரச்சினையை ஆறப்போட்டிருந்தார்களானால் அடுத்த பத்து ஆண்டுகளில் ஏதாவது ஒரு தீர்வைக் கண்டிருக்கும்.

இப்பொழுது நாடு, இரண்டு கருத்துக்களைக் கொண்டதாகப் பிரிந்துவிட்டது !

'அரசியல் சட்டத்திலிருந்து மொழியைப் பற்றிய பகுதியை அகற்றிவிட வேண்டும்; ஆங்கிலத்தை ஆட்சிமொழியாக வைத்துக்கொண்டு தொடர்ந்து பணியாற்ற வேண்டும்' என்று இராஜாஜி நினைக்கிறார்; 'இருபது—இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஓர் இந்திய இணைப்பு மொழி அவசியமாகலாம்; அப்பொழுது, அதைக் கவனித்துக் கொள்ளலாம்' என்ற அவரது திட்டத்தை நான் ஆதரிக்கிறேன்.

தூதுவர்களின் நியமனப் பத்திரங்கள் போன்ற நிகழ்ச்சிகளுக்குக் கூட ஆங்கிலம்தான் பலஆண்டுகளுக்குத் தேவைப்படும் !

ஆங்கிலம் இன்னும் நெடுநாளைக்கு ஆட்சி மொழியாக இருக்கத்தான் வேண்டும் என்பதைப் பெரும்பாலான காங்கிரசுத் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

" ஆங்கிலம் அனைத்து நாட்டுக்கும் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும்' என்று தலைமை அமைச்சரே கூறியிருக்கிறார்; இந்தி தேசிய இணைப்பு மொழியாக இருக்கலாம்' என்கிறார்; 'வட்டார அடிப்படையில் இணைப்பு மொழியும் அவசியமாகலாம்' என்பது என் கருத்து.

'நாளடைவில், இந்திய மொழிகளில் ஒன்று இந்தியாவின் இணைப்பு மொழியாக வரக்கூடும்' என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அது தமிழாக அமையலாம் என்பது என் சொந்தக் கருத்து.

" இந்திய மொழிகளில் ஏதாவது ஒன்று இந்தியாவின் தேசிய மொழியாவதற்கு அவசியமான தகுதியை எய்தும்போது, அதை இணைப்பு மொழியாக்கிக் கொள்ளலாம்" என்பதே தி. மு. கழகத்தின் நிலையாகும்."

ஆட்சிமொழி மசோதாவுக்கு, தி. மு. கழகம் அனுப்பியுள்ள இரு திருத்தங்களை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் விளக்கினார்கள் :—

**" மத்திய அரசுப் பணிகளுக்கு மனுச் செய்துகொள்வோருக்கு, அரசியல் சட்ட எட்டாவது பிரிவில் குறிப்பிட்டுள்ள இந்திய மொழிகளில் ஏதாவது ஒன்றில் தகுதி இருந்தால் போதும் "**

என்பது ஒரு திருத்தம்.

**" இந்தி மாநிலங்களிலிருந்து இந்தி பேசாத மற்ற மாநிலங்களுக்கு வரும் கடிதங்கள், ஆங்கிலத்தில்தான் இருக்கவேண்டும் "**

என்பது மற்றொரு திருத்தம்.

## இந்தி வெறியரின்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்திக்காரர்கள் தயார் என்றால், வடக்கே வேலை பார்த்துப் பிழைக்கும் தென்னாட்டவர் அனைவரையும் தென்னாட்டுக்குத் திரும்பிவிடுமாறு கேட்டுக்கொள்ளத் தயாராகயிருக்கிறேன் "

என்று இராசாராம் கேட்டபோது, காங்கிரசு—சம்யுக்த சோஷலிஸ்டு—ஜனசங்கம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பினர் !

" இப்படிச் சொல்லக்கூடாது " என்று தாரகேசுவரி சின்கா (காங்) கூறினார்; மற்றுஞ்சில காங்கிரசு உறுப்பினர்கள், 'இந்தப் பேச்சை அவையின் நிகழ்ச்சிக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிடவேண்டும்' என்றனர்.

கழக உறுப்பினர் இரா. செழியன் எழுந்து, "திரு. விபூதி மிஸ்ரா, 'நான் அப்படிச் சொல்லவில்லை' என்று மறுப்புத் தெரிவிப்பாரா ?" என்று கேட்டார்.

அப்போது துணை அவைத் தலைவர், 'தி. மு. க. உறுப்பினர் இப்படிச் சொல்லியிருக்கத் தேவையில்லை' என்று கூறியபோது, இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் பி. இராமமூர்த்தி குறுக்கிட்டு, 'தென்னகத்தவரை இழிவுபடுத்த விபூதி மிஸ்ராவினால் முடியுமானால், அவர்களிடமிருந்து கிடைக்கும் பதிலடியையும் தாங்கிக்கொள்ள அவர் தயாராகத்தான் இருக்கவேண்டும்' என்றார்.

தி. மு. க. குழுத் தலைவர் திரு. க அன்பழகன் எழுந்து, 'காங்கிரசுக் கட்சி, தனது உறுப்பினர் ஒருவர் அவமதிக்கக் கூடிய வகையில் பேசியதற்கு என்ன சொல்லப் போகிறது என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்' என்றார்.

ஆங்கிலத்தை ஒழிப்பதற்காக வாதாடிக்கொண்டிருக்கும் ஜனசங்கத் தலைவர்களும், இந்தி மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர்களும், அமைச்சர்களாகவுள்ள பகவத் ஜா ஆசாத்—டாக்டர் இராம் சுபாக் சிங் உட்படப் பலர் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலம் மூலம் கல்வி கற்பிக்கும் பள்ளிகட்கு அனுப்பிவருகிறார்கள் என்பதை ஒரு பத்திரிகைச் செய்தியை ஆதாரங்காட்டி எடுத்துரைத்தார் திரு. இராசாராம் !

**" அமெரிக்கக் கோதுமையும், பாங்காக் அரிசியும் சாப்பிட்டு, பிரான்சில் தயாரிக்கப்பட்ட விமானங்களில் ஏறிச் சவாரி செய்வதில் ஆட்சேபனை இல்லை என்றால், ஆங்கிலத்தைக் கற்பதில் மட்டும் இந்திக்காரர்களுக்கு ஆட்சேபனை ஏன் இருக்கவேண்டும் ?" என்று கேட்டார் அவர்.**

## அறிஞர் அண்ணா

### சுற்றுப்பயணம்

டிச. 17, 18 : சேலம் நிகழ்ச்சிகள்

19 காலை 9 மணி : நாகரசம்பட்டி—பெரியார் இராமசாமி கல்வி நிலையம் திறப்பு விழா.

மாலை 4-30 மணி : மாத்தூர்—அரசினர் உயர்நிலைப்பள்ளி கட்டிடத் திறப்புவிழா.

அமைச்சர்

## எஸ்.ஜே. சாதிக்பாட்சா

### சுற்றுப்பயணம்

டிச. 17 காலை 10 மணி : நெச்சலூர் ஊராட்சி ஒன்றியம் பள்ளியைத் திறந்துவைத்தல்; 11 மணி : நங்கவரம்—ஊராட்சி மன்ற வரவேற்பு; 12 மணி : குளித்தலை—வழக்கறிஞர்கள் சங்க வரவேற்பு; பிற்பகல் 3 மணி : குளித்தலை—அரசினர் மருத்துவமனையைப் பார்வையிடல்; 3-30 மணி : எம்.ஜி.ஆர். மன்றத்தின் மின் விளக்கினை ஏற்றிவைத்தல் : மாலை 4 மணி : ஊராட்சிமன்ற வரவேற்பு : 4-30 மணி : கா. சு. பிள்ளை நினைவு மன்ற மூன்றுவது ஆண்டுவிழா ; இரவு 8 மணி : நாச்சியார் கோயில் — பொதுமக்கள் வரவேற்பு ; 9 மணி : கும்பகோணம்—மூர்த்தி கலை அரங்கில் 'சந்தனக் கிண்ணம்' நாடகத்திற்குத் தலைமை வகித்தார்.

## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டங்கள்

### 18--12--67

**குளித்தலை**

கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் முரசொலி மாறன் எம்.ஏ., எம்.பி. அவர்களுக்குப் பாராட்டு; மாலை 7 மணிக்கு திரு.வி.க. திடலில்; தலைவர்: எம். கந்தசாமி பி.ஏ.,பி.எல்., எம்.எல்.ஏ.; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, பெ. சவுந்தர பாண்டியன் எம்.ஏ.,பி.எல்., எம்.எல்.ஏ., மீ.சு. இளமுருகு பொற்செல்வி, குளித்தலை முத்துகிருஷ்ணன், கு.வீ. முத்துசாமி, அ.பெ, கிருஷ்ணன், மற்றும் பலர்.

## பாலர் அரங்கம்

டிச. 17-ந் தேதி மாலை 2, 4-15 மணிக்கு

**'நீரில் வாழும் மனிதன்'**

(முழு நீள இரஷ்யக் கலர் படம்)

கட்டணம் வழக்கம்போல்

# காமராசரின் புதிய 'கோலம்'!

அனைத்திந்தியப் பிரச்சினையான ஆட்சிமொழிப் பிரச்சினையில் டெல்லிப் பட்டணத்தில் 'சூடு' பறந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில்—அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர்—சென்னைத் திருமலைப் பிள்ளை சாலை மாளிகையில் அமர்ந்து 'குளிர்ச்சி'யான நண்பர்களுடன் கூடி, தமிழ் நாட்டு அரசியலில் தமது எதிர்காலத்துக்கான 'குளிச்சி'யைத் தேடிக் கொண்டிருக்கிறார் என்பதில் ஒன்றும் வியப்பில்லை !

" அகில இந்தியப் பிரச்சினையென்ன—அகில உலகப் பிரச்சினையென்றால்கூட எங்கள் தலைவர் அதிர்ச்சியோ, பதட்டமோ அடையமாட்டார்; நறுக்குத் தெறித்தாற்போல் நாலு வார்த்தை வாயைத் திறந்து அவர் சொல்லிவிட்டாலே போதும்; அதைச் சொல்லுவதற்கான காலம் எது என்பதும் தெரியும்; அப்போது பார்த்துக்கொள்வார் "—என்று தமிழ் நாட்டுக் காங்கிரசு 'இளம்வெட்டு'கள் சமாதானம் கூறக் கூடும் என்பதும் தெரியும் !

ஆனாலும் அந்தப் 'பெரியவர்', நேரம் பார்த்து பெங்களூரில் போய் நாலு வார்த்தை சொன்னாலும் சொன்னார்—'உள்ளதும் போச்சு......' !

" ஆட்சிமொழித் திருத்த மசோதாவை அப்படியே நிறைவேண்டும் " என்று இவர் சொல்லப்போய், 'இவராவது—சொல்லுவதாவது ? அதை நான் ஏற்பதாவது ?' என்று, இருந்ததையும் திருத்த ஒப்புக்கொண்டுவிட்டார், இந்திரா காந்தியம்மையார் !

அரசியலைக் கரைத்துக் குடித்து — அனைத்திந்தியாவிலும் தம்மை அசைப்பாரில்லை—என்று நம்பிக்கொண்டிருந்த காமராசரைப் பார்த்து, இன்று, அனைத்திந்திய அரசியலே, 'ஆகட்டும் -- பார்க்கலாம்' என்று கூறி அனுப்பிவிட்டது !

ஆட்சிமொழி மசோதாவைப் பற்றியோ, அடுத்துக் கூடவிருக்கும் அனைத்திந்தியக் காங்கிரசு மாநாடு குறித்தோ தம்மிடம் 'அபிப்பிராயம்' கேட்க ஆள் இல்லையே—என்று 'மனுஷன்' அயர்ந்தாவிட்டார் ? 'இருக்கவே இருக்கிறது சங்கரி இடைத் தேர்தல்' என்று—நாலு வரி சொல்லுவதற்குப் பதில் எழுதியே தள்ளிவிட்டார் !

'தமிழ்நாட்டுச் சட்டமன்றத்திற்கு நடக்கும் சங்கரி தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரசுக்கு வாக்களிக்கவேண்டும்' என்று இந்த அகில இந்தியத் தலைவர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார் !

ஆட்சிமொழிப் பிரச்சினையில் எப்படி வாக்களிக்க வேண்டும் என்று தமிழ்நாட்டுக் காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதுவும் சொல்ல முனையவில்லை !

தென் சென்னை இடைத்தேர்தலின்போது, 'சி. ஆர். இராமசாமி வெற்றிபெற்றால் ஆட்சிமொழிச் சட்டம் கொண்டுவரப் பாடுபடுவார்; அவர் முயற்சி வெற்றி பெறுவிட்டால் இராஜினமாச் செய்வார்' என்று முழங்கிய காமராசர், ஆட்சிமொழி மசோதா தாம் எதிர்பார்த்தபடி அப்படியே நிறைவேறவில்லை என்றாலும், 'நம்ம ஆள்தான் (சி. ஆர். இராமசாமி) ஜெயிக்கவில்லையே—நமக்கென்ன அதைப்பற்றி இப்போது கவலை' என்று இருந்துவிட்டார்போலும் !

'நானிருக்கப் பயமேன் ?' என்று 'சாயி பாபா பாணி'யில், 'நான் இருக்கும்வரை இந்தி வராது ; பயம் வேண்டாம்' என்று கூறிய இந்த மகானுபவர்தான், தென் சென்னை இடைத்தேர்தலில், மொழிப் பிரச்சினைக்குப் பரிகாரமாக இராமசாமியின் இராஜினமாவைக் குறிப்பிட்டார்.

இப்போது சங்கரி வாக்காளர்கட்கு மொழிப் பிரச்சினையையே நினைவூட்டவில்லை ! அவர்களைத் திசை திருப்பும் வேலையில் முனைந்திருக்கிறார்—'மாஜி' தேர்தல் புலியான இந்த அரசியல் அசகாயசூரர் !

கிராம மக்களின் நல்வாழ்விலும், விவசாயிகளின் முன்னேற்றத்திலும், அரிசனங்கள்—பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரின் வளர்ச்சியிலும் தி. மு. க. ஆட்சி அக்கறை காட்டவில்லையாம் !

இதைவிட மற்றொரு 'குண்டை'யும் தூக்கிப் போட்டிருக்கிறார் ! கைத்தறித் தொழிலையும், நெசவுத் தொழிலாளரையும், தி. மு. க. ஆட்சி பாதுகாக்கவில்லையாம் !

கைத்தறித் தொழில்மீது காமராசருக்குப் பிறந்துள்ள திடீர் அக்கறையைப் பார்த்தீர்களா ? இவருக்கு எப்போது கதர் மீதிருந்த 'காதல்' கசந்து, கைத்தறிமீது கருணை பிறந்தது ?

மொத்தத்தில், கிராம மக்கள் அனைவருமே புறக்கணிக்கப்படுகிறார்களாம் ! நகரவாசிகளுக்குத்தான் எல்லாச் சலுகைகளும் அளிக்கப்படுகின்றனவாம் ! எனவே, கிராம மக்கள் காங்கிரசுக்கு வாக்களிக்க வேண்டுமாம் !

இருபதாண்டு ஆட்சியின் மூலவராக இருந்தவருக்கு, இந்தப் பத்து மாத காலத்தில் புதிதாகப் பிறந்த 'ஞானோதயம்' வாழட்டும்—வளரட்டும் !

" என்னதான் கரடியாகக் கத்தினாலும்—தலைகீழாக நின்றாலும், இனி உங்களை நம்பமாட்டோம் " என்று தென் சென்னை மக்கள் காலை வாரிவிட்ட பிறகு, கிராம மக்களிடம் 'மகுடி' ஊதிப் பார்க்கிறார்—இந்த 'மகாத்மா'வின் வாரிசு ! அவர்களா மயங்குவார்கள் ! அவர்களுக்குத் தெரியாதா—இந்தக் 'கன'வானின் கடந்தகால மாய்மாலங்களெல்லாம் !

" அதெல்லாம் இருக்கட்டும்—போயும் போயும் இவ்வளவு பெரிய மனிதர்—அகில இந்தியத் தலைவர், ஏன் சங்கரித் தேர்தலுக்கு அறிக்கை விடுகிறார் ? தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் எங்கே போனார் ? இனித் தமிழ்நாட்டில் ஒரு பஞ்சாயத்து இடைத் தேர்தலுக்குக்கூட அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர், ஏன் அறிக்கை விடவேண்டிய நிலை ஏற்படும் போலிருக்கிறது " என்று அரசியல் புரிந்த கிராமவாசிகள் பேசிக்கொள்ளத்தான் செய்வார்கள் !

எல்லாம் காலத்தின் கோளாறு—காமராசரின் தலையில் விடிந்திருக்கிறது—ஆகட்டும் பார்க்கலாம் !

—மா. சே.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.